

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.1.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெற்ற பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (Jamboree) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி விழாவில் பெருந்திரளணி அஞ்சல் தலை மற்றும் அஞ்சல் உறையை வெளியிட்டார். இவ்விழாவில் கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கர்நாடக சட்டமன்ற பேரவைத் தலைவர் யு.டி. காதர் ஃபரீத், நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரை வைகோ, செல்வி. செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், எம்.பழனியாண்டி, ப.அப்துல் சமது, மரு.வை.முத்துராஜா, சமூகநலத் துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி.சோ. மதுமதி. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைவர், அனில்குமார் ஜெயின், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தேசிய முதன்மை ஆணையர் கே.கே.கண்டேல்வால், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் மாநில முதன்மை ஆணையர் முனைவர்.க.அறிவொளி மற்றும் அரசு அலுவலர்கள், சாரண, சாரணியர்கள். கலந்து கொண்டனர்.

## கல்வி அறிவு, ஒழுக்கம் தன்முனைப்பு மிக்க

# இளைஞர்களை உருவாக்க வேண்டியது அவசியம்!

### பாரத சாரண – சாரணியர் இயக்கத்தின் வைரவிழாவில்

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!



**திருச்சி, ஜன. 30-**

**திருச்சி மாவட்டம், மணப்பாறையில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பாரத சாரண - சாரணியர் இயக்கத்தின் வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணியை (ஜம்போரி) நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர் பாரத சாரண - சாரணியர் இயக்கத்தின் வைரவிழா ஆண்டு அஞ்சல் உறை, சிறப்புமலர், பெருந்திரளணி கையேடு ஆகியவற்றை வெளியிட்டார்.**

**இதில் பங்கேற்ற பல்வேறு நாடுகள் - மாநிலங்களைச் சேர்ந்த சாரண - சாரணியரைப் பாராட்டியதுடன் வைரவிழா ஆண்டு நிகழ்வுகள் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் பெருந்திரளணி வெல்ல வாழ்த்தி, எழுச்சிமிகு உரையாற்றினார்.**

அப்போது அவர் ஆற்றிய எழுச்சிமிகு உரையின் வருமாறு:-

வரலாற்றுச்சிறப்புக்குரிய இந்நிகழ்வைத் தொடங்கி வைத்ததில் பெருமை கொள்கிறேன். பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைர விழாவையும், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டையும் சிறப்பிக்கின்ற வகையில், மிகச்சிறப்பாகவும் பிரம்மாண்டமாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்திய அளவிலான பெரும்திரள் அணி `ஜம்போரி'(பெருந்திரளணி)யைத் தொடங்கி வைப்பதில், நாங்கள் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். இங்கு சிறப்புக்குரிய அணிவகுப்பை நடத்தி, எங்களை எல்லாம் வரவேற்ற சாரண, சாரணியர் இயக்க மாணவர்களுக்கு எங்களின் அன்பையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சாரண, சாரணியர் இயக்கம்**

முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக் காலத்தில்தான் 2000-ஆம் ஆண்டில் சாரண, சாரணியர் இயக்கத்தின் ஐம்பதாம் ஆண்டு பொன் விழா நடைபெற்றது. இன்றைக்கு நம் முதலமைச்சரின் திராவிட மாடல் ஆட்சியில் வைர விழா ஆண்டு நிகழ்ச்சிகள் இங்கே வெற்றிகரமாகத் தொடங்கி வைக்கப்பட்டு இருக்கின்றன.

2024-ஆம் ஆண்டு நவம்பர் 7-ஆம் தேதியன்று நான் சாரண, சாரணியர் இயக்கத்தின் 75-ஆம் ஆண்டு வைர விழாவுக்கான லோகோ மற்றும் கொடியினை வெளியிட்டேன்.

வருகிற பிப்ரவரி 2-ஆம் தேதி நடைபெற இருக்கும் இதன் நிறைவு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார். திருச்சியில் இவ்விழாவை நடத்துவதற்காக, நமது திராவிட மாடல் அரசு 39 கோடி ரூபாயை ஒதுக்கி உள்ளது.

**20 ஆயிரம் மாணவர்கள்!**

இந்த ஏழு நாட்கள் நிகழ்வில் ஏறத்தாழ 20 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள். அவர்களுக்காக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தற்காலிக வசிப்பிடங்கள் (டெண்ட்) நிறுவப்பட்டுள்ளன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மூன்று மாதங்களுக்கு முன்பிலிருந்து நம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாநில சாரண, சாரணியர் இயக்கத்தின் தலைவர் அருமை நண்பர் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார். அவருக்கு எனது பாராட்டுகள், வாழ்த்துகள்.

**பள்ளி மாணவர்!**

கடந்த சில மாதங்களாகவே தொடர்ந்து, அவரைக் கவனித்து வருகிறேன். ஒரு அரசியல்வாதி, அமைச்சர் பொதுவாக வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டையில் தான் அவர் வலம் வருவார் என்பது, உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால், சமீபத்தில் சாரணர் சீருடையில் வந்திருந்தார். நான்கூட ஒரு பள்ளிமாணவர் என்னை பார்க்க வந்திருக்கிறார் என்று நினைத்தேன். அவர் அருகில் வந்த பிறகு தான் தெரிந்தது, அவர் நம் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் என்று.

**பெருமையும் கலாச்சாரமும்!**

அந்த அளவிற்கு இந்த நிகழ்ச்சியுடன் அவர் ஒன்றிவிட்டார். அவருக்கு மீண்டும், மீண்டும் எனது பாராட்டுகள். இந்த நிகழ்விற்காக பணியாற்றிய பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் பொறுப்பாளர்களுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும், அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு வந்துள்ள வெளிமாநிலத்தவர்கள், வெளி நாட்டினர் தமிழ்நாட்டின் பெருமைகளையும், கலாச்சாரங்களையும் தெரிந்துகொள்ள இந்த நிகழ்ச்சி மிக முக்கியமானதாக அமையும். அதேபோல், அவர்களின் கலாச்சாரம், பழக்கவழக்கங்களை தமிழ்நாட்டு குழந்தைகள் நீங்கள் அறிந்து கொள்ளவும் இந்த ஜம்போரி மிகப் பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்த சாரணர் இயக்கத்தைத் தோற்றுவித்த ராபர்ட் பேடன் பவல் அவர்களின் நோக்கமும் இதேதான். அவர் தன் தந்தையை சிறுவயதிலேயே இழந்துவிட்ட காரணத்தால், தன் தாயால் வளர்க்கப் பட்டவர்.

சேவை செய்யும் எண்ணத்தை, குழந்தைகளுக்குப் புத்தகங்களின் வாயிலாக பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுப்பதை விட, அவர்களுக்குக் களத்தில் வெளிப்புற நிகழ்ச்சிகள் மூலம் சொல்லிக் கொடுப்பது எளிது என்று பேடன் பவல் அவர்கள் எண்ணினார்கள்.

**இந்திய சுதந்திரம்!**

இதன், விளைவாகத்தான் இந்த சாரண, சாரணியர் இயக்கத்தினை, 1907-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இதை துவக்கி வைத்தார். நம் இந்தியா சுதந்திரம் அடைந்ததற்கு பின்பு, 1950-களில் பாரத சாரண, சாரணியர் இயக்கம் தொடங்கப்பட்டது.

குழந்தைகளின் இயல்பான வேடிக்கைக் குணத்தையும், விடாமுயற்சியையும் பயன்படுத்தி, அவர்களது படைப்பாற்றலையும், தனித்திறமையையும் ஊக்குவிக்க முடியும் என்பதை சாரண, சாரணியர் இயக்கம் நிரூபித்துள்ளது. 'அதிகாரம் பெற்ற இளைஞர்கள் மற்றும் முன்னேறிய இந்தியா' என்பது இந்த ஆண்டு ஜம்போரியின் கருப்பொருளாக அமைந்து, கல்வி அறிவு பெற்ற, ஒழுக்கமுடைய, தன் முனைப்புள்ள இளைஞர்களை உருவாக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைக்கிறது.

**விலைமதிப்பில்லாத சொத்து!**

நமது நாட்டின் எதிர்காலம் இப்படிப்பட்ட இளைஞர்களை நம்பியே இருக்கிறது. இந்த ஜம்போரி (பெருந்திரளணி) உங்களின் தனித் திறமைகளைப் பட்டைத் தீட்டி, இந்நாட்டின் விலைமதிப்பில்லாத சொத்தாக உங்களை மாற்றும்.

இந்த முகாமில், நீங்கள் உங்கள் அடிப்படை வாழ்க்கைத் திறனை வளர்த்துக் கொள்வதுடன், சமுதாயத் தொண்டில் ஈடுபட்டு, சிறந்த தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வீர்கள். இந்த அனுபவங்கள் மூலமாக, நீங்கள் பொறுப்பான குடிமக்களாக வாழ்நாள் முழுவதும், சமூகத் தொண்டாற்றும் உறுதியைப் பெறுவீர்கள்.

**இந்தியக் குடிமகன்!**

இந்த ஜம்போரியில் பல மாநிலங்களில் இருந்து வந்து மொழி, மதம், ஜாதி போன்றவற்றை எல்லாம் மறந்து, இந்தியாவின் குடிமகன் என்ற ஒரே எண்ணத்தை அனைவரும் ஒன்றாகக் கூடி ஒரே இடத்தில் ஏழு நாட்கள் நீங்கள் அனைவரும் முகாம் வாழ்க்கை நடத்தப் போகிறீர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் எண்ணமும் இதேதான். மனிதர்கள் யாரும் ஒருவருக்கொருவர் எந்த வேறுபாடும் பார்க்காமல் மனிதாபிமானத்தோடு, மனிதப் பண்புகளை உயர்த்தி வாழவேண்டும் என்பதுதான் அவரின் ஒரே குறிக்கோள். கலைஞர் அவர்கள் கொண்டு வந்த எத்தனையோ திட்டங்களில் மிகப் புரட்சிகரமான திட்டம் என்றால், அது கலைஞர் பெரியார் சமத்துவப்புரம் திட்டம்தான். அனைத்து மக்களும் எந்தவித ஏற்றதாழ்வும் இல்லாமல், ஒரே இடத்தில் கூடி வாழ வேண்டும் என்பதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்த பெரியார் சமத்துவபுரம் திட்டம்.

**தமிழ்நாட்டுக்குப் பெருமை!**

இன்று மாநிலமெங்கும் பல்வேறு சமத்துவபுரங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. அவற்றை நிரந்தர ஜம்போரிகள் (பெருந்திரளணிகள்) என்று குறிப்பிட்டால் மிகையாகாது. எனவே, முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, நீங்கள் ஜம்போரி நடத்துவது தமிழ்நாட்டு மக்களுக்குப் பெருமை, தமிழ்நாட்டிற்குப் பெருமை என்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியை தமிழ்நாட்டில் நடத்த முன்வந்த அத்தனைப் பொறுப்பாளர்களுக்கும், இந்த ஜம்போரியில் பங்கேற்க வந்துள்ள அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறப்புக்குரிய வைர விழா மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழாவுடன் ஜம்போரி வெல்லட்டும்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்!**

அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், சா.சி.சிவசங்கர், அன்பில் மகேஷ்பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோதிமணி, துரை. வைகோ, சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் சமது, பழனியாண்டி, முத்துராஜ், சமூகநலத்துறைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் ஐ.ஏ.எஸ்., பள்ளிக்கல்வித்துறைச் செயலாளர் மதுமதி ஐ.ஏ.எஸ்., சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு பாடநூல் கழக மேலாண்மை இயக்குநர் சங்கர் ஐ.ஏ.எஸ்.,

திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் ஐ.ஏ.எஸ்., சாரண, சாரணியர் இயக்க தேசியத் தலைவர் டாக்டர்.அனில்குமார் ஜெயின், தேசிய ஆணையர் கே.கே.கந்தேல்வால் ஐ.ஏ.எஸ்., மாநில ஆணையர் டாக்டர் ஜி.அறிவொளி, மாநிலச் செயலாளர் டாக்டர் பி.எ.நரேஷ், பேடன் பவலின் கொள்ளுப்பேரன் ஜில்வெல், திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், துணை மேயர் திவ்யா, கர்நாடகா மாநிலத் துணை முதலமைச்சர் வீ.கே.சிவக்குமார், கர்நாடாக சட்டப்பேரவைத் தலைவர் காதர் மற்றும் பாரத சாரண, சாரணியர் இயக்கத்தினர், மாணவ மாணவிகள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.